திரு. கே. எ. வகாப் : அதைப் பற்றி அவர்கள் அக்கறை இல்லாமல் இருந்தாலும் தமிழக அரசு அக்கறை எடுத்து, பல்லாயிரக்கணக்கான வியாபாரிகளின் உயிர் உடைமை சம்பந்தப்பட்ட இப்பிரச்சினையில்......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி மறுக்கப்பட்ட பிறகு எழுந்து கொண்டு பேசுவது என்ன முறை ? நம்முடைய அவையிலே நடந்துகொள்ள வேண்டிய சில முறைகள் இருக்கின்றன. அதற்கு மாறாக எழுந்து பேசினால் என்ன செய்ய முடியும்? உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களை விட்டு பார்லிமெண்டிலே எழுப்பச் சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு சட்ட மன்றத்திலே எழுப்பினால் என்ன ஆவது? அனுமதி மறுக்கப்பட்ட ஒன்றைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லுவது முறையா?

(இ) அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் சொத்து விபரக் கணக்குக் குறித்து

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றைய தினம் பேரவையின் முன்னால் இங்கே சில தஸ்தாவேஜுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சில அமைச்சர்களுடைய சொத்து கணக்குகள் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே நம்முடைய விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தன் கணக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது........(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே தவறு இருக்குமானால், தவறான தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி இங்கே உரிமைப் பிரச்சினை கொண்டு வாருங்கள். இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது.

(3) உரிமைப் பிரச்சினை "மக்கள் குரல்" நாளேட்டில் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருவாளர்கள் வீராசாமியும், தோப்பூர் திருவேங்கடமும் "சென்னை 18-4-1975, வெளியூர் 19-4-1975 தேதியிட்ட "மக்கள் குரல்" நாளேட்டில் "வீராணம் திட்டத்தில் ரூ. 3½ கோடி ஊழல்—சட்ட சபைக் கமிட்டி அம்பலப்படுத்தும் தகவல்" என்ற தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள தகவல், இப்பேரவையில் நேற்று அளிக்கப்பட்ட பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கையில் நாளேட்டில் குறிப்பிட்டுள்ளது போல எந்தத் தகவலும் இல்லை. எனவே,